**அரக்கோணம் நகராட்சி**
**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண்.66 நாள்..27.11.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.30.11.2020 திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 30.11.2020 திங்கள் கிழமை கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_ மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் 02**

இந்நகராட்சியில் பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை பூங்காக்கள் மற்றும் நுண்ணுயிர் உரம் மையம் மூலமாகவும் உரமாக்குவதற்கு தேவையான இ.எம்.சொலிசன் (EM SOLUTION) 750 லிட்டர் கொள்முதல் செய்து கொள்ளவும் தோராய செலவினம் ரூ.7.20 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.872/ எச்1/2020)**

**பொருள் எண் 03**

புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள பயனாளிகளை கணக்கெடுத்து தேர்வு செய்து கணினியில் பதிவேற்றம் செய்ய திட்டத்திற்கான Online–ல் PDF வடிவில் பெறப்பட்டுள்ள படிவங்கள் அச்சடிக்க அரக்கோணம் டிஜிட்டல் ஜெராக்ஸ், அரக்கோணம் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்போது 2000 பக்கங்கள் அச்சடிக்கப்பட்ட நிலையில் அந்த PDF ல் உள்ள தெருவின் பெயரில் அனைத்திலும் அரக்கோணம் என தவறுதலாக உள்ளது என மாவட்ட ஆட்சியர் அவர்கள், இராணிப்பேட்டை அலுவலகத்திலிருந்து தொலைபேசி தகவல் தெரிவிக்கப்பட்டு ஜெராக்ஸ் எடுக்கும் பணி நிறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள், இராணிப்பேட்டை அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற தொலைபேசி தகவலில் PDF தற்போது சரி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு மீண்டும் படிவங்கள் அச்சடிக்கப்பட்டது. ஏனவே தவறுதலாக அச்சடிக்கப்பட்ட 2000 பக்கங்களுக்கு ரூ.3,900/–மற்றும் 23988 பக்கங்களுக்கு ரூ.46,777/– ஆக மொத்தம் 25988 பக்கங்கள் அச்சடித்தமைக்கு ரூ.56,676/– அரக்கோணம் டிஜிட்டல் ஜெராக்ஸ், அரக்கோணம், அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்708/எச்1/2020)**

**பொருள் எண்.04**

இந்நகராட்சியில் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்திய பிறகும், கால்வாய் கழிவுகள் அகற்றிய பின்பும் மற்றும் பொது கழிப்பிடங்கள் தூய்மை படுத்தி பின்னும் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும் டியோடிசைன் (DEODISIN) தெளிப்பதற்கு 700 லிட்டர் டியோடிசைன் (DEODISIN) தேவைப்படுகிறது. எனவே டியோடிசைன் (DEODISIN) 700 லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.5.60 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 878/எச்1/2020)**

**பொருள் எண் 05**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் 8 எண்ணிக்கை TATA ACE மினி லோடு வேன் (LCV) களுக்கு குப்பைகள் எடுத்து செல்லும் போது காற்றில் குப்பைகள் பரக்காமல் இருக்க “12 X 8” அளவில் 16 எண்ணிக்கை மூடு வலைகள் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.2.80 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 873/எச்1/2019)**

**பொருள் எண் :06**

புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ உளள பயனாளிகளை கணக்கெடுத்து தேர்வு செயது கணினியில பதிவேறறம் செயயும் திட்டத்திற்கான Online–ல் PDF வடிவில் பெறப்பட்டுள்ள படிவங்கள் அச்சடிக்க XEROX கடைகளில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | அரக்கோணம் டிஜிட்டல் ஜெராக்ஸ், அரக்கோணம் தொகைரூ | ஸ்ரீ மகாலட்சுமி அம்மா ஜெராக்ஸ் திருத்தணி தொகைரூ |
|---|---|---|---|---|
| 1 | BPL படிவம் அச்சடித்தல் (XEROX) | 23988 பக்கங்கள் | ரூ.46,777/– | ரூ.47,976/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அரக்கோணம் டிஜிட்டல் ஜெராக்ஸ், அரக்கோணம், அவர்களுக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.46,777/–வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான செலவின தொகை ரூ.46,777/– வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்708/எச்1/2020)**

**பொருள் எண் 07**

இந்நகராட்சி பகுதிகளை தூய்மையாக வைத்திடவும், கொரானா தொற்று, இதர தொற்று நோய்கள் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், கிருமி நீக்கம் செய்யும் பணிக்கு தேவைப்படும் கிருமிநாசினியான **ECO CLEAN 50 PLUS – DC (Double Concentric) DISINFECTANT 150** லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் **20.11.2020** அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | விவரம் | ஸ்ரீ சக்தி ஏஜென்ஸி ஈரோடு (GST உட்பட) ஒரு லிட்டர் விலை ரூ | S.R.டிரேடர்ஸ் ஈரோடு (GST உட்பட) ஒரு லிட்டர் விலை ரூ விலை ரூ |
|---|---|---|---|
| 1 | **ECO CLEAN 50 PLUS – DC (Double Concentric) DISINFECTANT** (1 லிட்டர்) | 5,664/- | 6,147.80/- |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ சக்தி ஏஜென்ஸி, ஈரோடு,** நிறுவனத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை ரூ.**8.50** லட்சம் வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 869/எச்1/2020)**

**பொருள் எண் .08**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை பூங்காக்கள் மற்றும் நுண்ணுயிர் உரம் மையம் மூலமாகவும் உரமாக்குவதற்கு தேவையான இ.எம்.சொலிசன் (EM SOLUTION) 750 லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 20.11.2020 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விவரம் | திருமுருகன் டிரோடர்ஸ் நாமகல் (GST 18 % உட்பட ) ஒரு லிட்டர் விலை ரூ | சிவம் டிரோடர்ஸ் சென்னை (GST 18 % உட்பட ) ஒரு லிட்டர் விலை ரூ |
|---|---|---|---|
| 1 | இ.எம்.சொலிசன் (EM SOLUTION) (1 லிட்டர்) | 950/– | 980/– |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **திருமுருகன் டிரோடர்ஸ், நாமகல்,** நிறுவனத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 872/எச்1/2020)**

**பொருள் எண் .09**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் லாரிகளுக்கு குப்பைகள் எடுத்து செல்லும் போது குப்பைகள் காற்றில் பரக்காமல் இருக்க குப்பை லாரிகளுக்கு **“25 X 15”** அளவில் **6** எண்ணிக்கை மூடு வலைகளும் மற்றும் “12 X 8” அளவில் **8** எண்ணிக்கை மூடு வலைகளும் கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் **24.11.2020** அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விவரம் | திருமுருகன் டிரோடர்ஸ் நாமகல் (GST 18 % உட்பட ) ஒன்றின் விலை ரூ | சிவம் டிரோடர்ஸ் சென்னை (GST 18 % உட்பட ) ஒன்றின் விலை ரூ |
|---|---|---|---|
| 1 | குப்பை லாரி மூடு வலை அளவு “12 X 8” | 17000/- | 18000/- |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **திருமுருகன் டிரோடர்ஸ், நாமகல்,** நிறுவனத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்

அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 873/எச்1/2020)

**பொருள் எண் .10**

இந்நகராட்சியில் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்திய பிறகும், கால்வாய் கழிவுகள் அகற்றிய பின்பும் மற்றும் பொது கழிப்பிடங்கள் தூய்மை படுத்தி பின்னும் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும் டியோடிசைன் (DEODISIN) தெளிப்பதற்கு 700 லிட்டர் டியோடிசைன் (DEODISIN) கொள்முதல் செய்து கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 24.11.2020 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | திருமுருகன் டிரோடர்ஸ் நாமகல் (GST 18 % உட்பட ) | சிவம் டிரோடர்ஸ் சென்னை (GST 18 % உட்பட ) |
|---|---|---|---|
| 1 | டியோடிசைன் (DEODISIN) (1 லிட்டர்) | 800/- | 850/- |

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **திருமுருகன் டிரோடர்ஸ், நாமகல்,** நிறுவனத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவினத்தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 878/எச்1/2020)**

**பொருள் எண் .11**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான எம்.ஏ.ஜெயின் நகராட்சி நடுநிலைப்பள்ளி, போலாட்சியம்மன் நகராட்சி நடுநிலைப்பள்ளி, சோமசுந்தரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் நகராசுத்தி நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு தற்கால பாட திட்டத்திற்கு ஏற்ப பாடங்களை பயில்வதற்கும், தூசுக்கள் வராதவண்ணம் பாடங்களை நடத்துவதற்கு ஏதுவாக ஆசிரியர்களுக்கும் மற்றும் பள்ளிக்கும் தேவையான உபகரணங்களான ஆசிரியர்கள் எழுதும் பச்சை வண்ண பலகைகள், மாணவர்கள் எழுதும் கீழ்மட்ட பலகைகள், தானியங்கி மணி மற்றும் நவீன வகுப்பு அறை ஆகியவைகளுக்கு ஆகும் மொத்த மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.887/2019/இ1)**

**பொருள் எண் .12**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 வேணுகோபால் நகர் பகுதியில் சாலை மிகவும் பழுதுடைந்தும் போக்குவரத்துக்கு இடையூராக உள்ளதால் தற்காலிகமாக WMM கொண்டு சாலையை செப்பனிட தோராய செலவினம் மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியையும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.1097/2020/இ1)**

**பொருள் எண் .13**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 டவுன்ஹால் 6–வது தெரு மற்றும் மாணிக்கம் தெருவில் மிகவும் முழுவதும் சேதமடைந்து போக்குவரத்துக்கு இடையூராக உள்ளதால் புதியதாக சாலை அமைக்க வேண்டியுள்ளது. அப்பகுதியில் புதியதாக பேவர் பிளாக் சாலை அமைக்க தோராய மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியையும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.992/2020/இ1)**

**பொருள் எண் .14**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சிறு மின்விசை பம்புகளுக்கு தேவையான 1HP Submerzible Motor Pumps and Starter with Accessories விநியோகம் செய்தல் மற்றும் நகர் பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் குடிநீர் வால்வுகள் விநியோக செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியையும், பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.1110/2020/இ1)**

**பொருள் எண் .15**

அரக்கோணம் நகராட்சி தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் தலைமை நீரேற்றும் நிலையங்களை பராமரிக்க நகராட்சியில் பணியாளர்கள் இல்லாததால் தனியார் ஆட்களை கொண்டு நீரேற்றும் நிலையங்களை இயக்க 2020–2021ம் ஆண்டுக்கு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்கள் 2020–2021ம் ஆண்டுக்கான நிர்ணமிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நீரேற்றும் நிலையங்களை இயக்க தோராய மதிப்பீடு ரூ.9.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், குடிநீர், பணியின் அவசியம் கருதியும், மேற்படி வேலைக்கும் பணிக்கான தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.1029/இ1/2020**

**பொருள் எண் .16**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையங்களிலுள்ள நீர்மூழ்கி மின் மோட்டார்கள் மின் இணைப்பு கேபிள்கள் உராய்வு காரணமாகவும் பழுதடைந்து விடுகிறது. இதனால் குடிநீர் ஏற்றம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது, எனவே, நீர் மூழ்கி மோட்டார்களை பழுதுபார்க்கவும், 125HP Vertical Hallow Turbine மோட்டார்களை பராமத்து பணிகள் செய்யவும் மதிப்பீடு ரூ.5.00

இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1029/இ1/2020**

**பொருள் எண் .17**

வட கிழக்கு பருவ மழை – 2020 க்கான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு எண்ணிக்கையில் ஆயில் இன்ஜின் மற்றும் அதன் உதிரிபாகங்களை வாங்க வேண்டியுள்ளது அதற்கான தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. பணியின் அவசிர அவசியம் கருதி நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.787/இ1/2020)**

**பொருள் எண் .18**

இந்நகராட்சியில் 2020–2021ன் கீழ் 29.10.2020ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | வட கிழக்கு பருவ மழை – 2020 க்கான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நகர பகுதிகளில் உள்ள நீர் நிலைகளுக்கு செல்லும் வரத்து கால்வாய்களை தூர் வாரி சுத்தம் செய்தல் | **5.00** | திரு.எஸ்.பாஸ்கரன் | 0.18% | திரு. வி.சதீஷ்குமார் | 2.293% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **2** | வட கிழக்கு பருவ மழை – 2020 க்கான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான உபகரணங்களான மணல் முட்டைகள், டீசல் இன்ஜின்கள், டீசல் ஜெனரேட்டர், மண்வெட்டிகள், பீளிட்சிங் பவுடர், பீனாயில், லைம் பவுடர் மற்றும் இதர உபகரணங்களை கொள்முதல் செய்தல் | **3.00** | திரு. வி.சதீஷ்குமார் | 0.00% | திரு. எஸ்.ரமேஷ்பாபு | 7.08% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/இ1/2018**

**பொருள் எண் .19**

இந்நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் 13.11.2020ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| **1** | அரக்கோணம் நகராட்சி வார்டு 6 டவுன்ஹால் 4வது தெரு 3வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | **5.00** | திரு.கே.முனுசாமி | 0.02% | திரு. ஆர்.சண்முகம் | 0.090% |
| **2.** | அரக்கோணம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.03 கணேஷ் நகர் 11–வது தெருவில் தார் சாலை அமைத்தல் | **5.00** | திரு.என்.பாபு | 0.02% | திரு. எஸ்.ரமேஷ்பாபு | 0.539% |
| **3** | அரக்கோணம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.03 கணேஷ் நகர் 11–வது தெருவில் தார் சாலை அமைத்தல் | **5.00** | திரு. எம்.கார்திக் | 0.07% | திரு. வி.சதீஷ்குமார் | 0.186% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள உப்புகுளம் ராஜாபாதர் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 2.00 | திரு. எஸ்.ரமேஷ்பாபு | 0.01% | திரு. என்.பாபு | 0.773% |
| 5 | <u>குடிநீர் நிதி –2020–21</u> அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள அம்மா பாலுட்டு நிலையத்தில் குடிநீர் விநியோகம் வசதிகள் செய்து தருதல். | 2.00 | திரு.கே.முனுசாமி | 0.25% | திரு. ஆர்.சண்முகம் | 0.07% |
| 6 | அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் நீரேற்றும் நிலையம் மற்றும் ஜீப்ளி ரோடு உயர்நிலை நீர் தேக்க தொட்டி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் விநியோகம் செய்தல். | 9.50 | ஸ்ரீ சபரி பொறியியல் | 0.66% | ஸ்ரீ ராஜா கணபதி | 1.32% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 6 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் .20**

இந்நகராட்சியில் கல்வி நிதி 2020–2021ன் கீழ் 13.11.2020ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான எம்.ஏ.ஜெயின் நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் இரு வகுப்பறை கட்டிடம் கட்டுதல் | 9.90 | திரு.ஆர்.துரைராஜன் | 0.21% | திரு.கே.ரவி | 0.03% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி கிழக்கு நடுநிலைப்பள்ளியில் கூடுதல் இரு வகுப்பறை கட்டிடம் கட்டுதல் | 9.90 | திரு.ஆர்.துரைராஜன் | 0.52% | திரு.கே.ரவி | 0.45% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் .21**

இந்நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் 19.11.2020ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்கு 1 எண்ணிக்கையில் ஆயில் இன்ஜின் மற்றும் அதன் உதிரிபாகங்களை விநியோகம் செய்து இயக்கி தருதல் | 3.00 | Vijay Electricals | 0.02% | M K C Enterprises | 0.090% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1க்கான பணிக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .787/இ1/2020**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**